# திருமலைத்தீபம்

## Thirumalaitheepam

தீபம் – 83 ஆவணி – 2023 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=



## ஆயரின் செய்தி

இயேசுவின் பெயரால்
வாழ்த்துக்கள்!

யூலை மாதம் நடைபெற்ற பல நிகழ்வுகளுக்குள் இரு முக்கிய நிகழ்வுகளை நான் குறிப்பிட விரும்புகின்றேன். முதலாவது. யூலை மாதம் 8 ஆம் திகதி இளைஞர்களுக்கான சிறப்புக் கருத்தரங்கு. ஸ்பெயின் தேசத்தில் ஒரு மறைமாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணி. யோசப் கீதப்பொன்கலன் அடிகளார் இக்கருத்தரங்கை நடாத்தினார். அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெற்ற இக்கருத்தரங்கில் இளைஞர்களோடு தொடர்புள்ள பல தலைப்புகளில் உரையாற்றி வழிநடத்தினார். இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்த மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி. X.I.ரஜீவா அவர்களுக்கும் கருத்தரங்கை நடாத்திய அருட்பணி. யோசப் கீதப்பொன்கலன் அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

கலாநிதி. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
மறைமாவட்ட ஆயர்

→ 3



*2018, 2019, 2020 மற்றும் 2022ம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் சான்றிதழ்களும், பதக்கங்களும் பெற்றுக் கொண்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வானது 22.07.2023 அன்று யூபிலி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையும், கௌரவ விருந்தினராக கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி. M. சத்துரி பின்டோ அவர்களும், சிறப்பு விருந்தினராக அருட்பணி. B. போல் றொபின்சன் அடிகளாரும் கலந்து மாணவர்களை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வானது மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. அ.அ. றொஹான் பேணார்ட் அடிகளாரின் தலைமையிலும், நெறிப்படுத்தலிலும் மறைக்கல்வி நடுநிலைய பணியாளர்கள் மற்றும் மறையாசிரியர்களின் ஒத்துழைப்புடனும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. சுசிமன் டயானி அவர்களின் பங்களிப்புடனும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.*



2018 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்டத்தில் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்ட மாணவர் குழு



2019 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்டத்தில் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்ட மாணவர் குழு



2020 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்டத்தில் சான்றிதழ்கள் பெற்றுக் கொண்ட மாணவர் குழு



2022 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்டத்தில் சான்றிதழ்களும் பதக்கங்களும் பெற்றுக் கொண்ட மாணவர் குழு

### கடந்த நான்கு ஆண்டுகளில் திருவிவிலிய அறிவுப்போட்டி தொடர்பாக பங்குகளின் விபரப்பட்டியல்

**தமிழ்ப் பிரிவு**

அன்புவழிபுரம் – 29, உவர்மலை – 23, பேராலயம் – 19, பாலையூற்று – 17, சாம்பல்தீவு – 10, இலிங்கநகர் – 06, குவாடலூப்பே – 05
இருதயபுரம் – 05, சீனக்குடா – 01, நிலாவெளி – 01, செல்வநாயகபுரம் – 01, மூதூர் – 0, அலஸ்தோட்டம் –0 , கன்னியா –0, தம்பலகமம் –0

**சிங்களப் பிரிவு**

ஆண்டாங்குளம் – 15, சீனக்குடா – 10, பேராலயம் – 08, கந்தளாய் – 06, குவாடலூப்பே – 05, குச்சவெளி – 0, பாலையூற்று – 0, மூதூர் – 0

**ஆங்கிலப் பிரிவு**

பாலையூற்று – 03, பேராலயம் – 02, உவர்மலை – 02, இலிங்கநகர் – 01, அன்புவழிபுரம் – 01, சீனக்குடா – 0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பத்திரிகை ஆசிரியரின் பேனா...**

கடந்த நான்கு ஆண்டுகளாக - 2018, 2019, 2020 மற்றும் 2022 இல் தேசிய ரீதியில் இடம் பெற்ற விவிலிய வினா விடை மற்றும் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றியீட்டிய ஞாயிறு பாடசாலை மாணவர்களை கௌரவிக்கின்ற நிகழ்வை மறைக் கல்வி நடுநிலையம் பெருமிதமாகவும் மிகச்சிறப்பாகவும் 22.07.2023 நடாத்தி முடித்திருந்தது.

எமது மறைமாநில ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அடிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி இருந்தார். மறையாசிரியர்கள் தங்களது ஒத்துழைப்பை தந்திருந்தார்கள். இருப்பினும் ஒரு சில மறையாசிரியர்கள் பரிபூரண ஒத்துழைப்பை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கதும், மெச்சுதற்குரியதுமாகும். மறைக்கல்வி நடுநிலைய உடன் உழைப்பாளிகள் மற்றும் கிறிஸ்தவ மத விவகாரங்கள் தொடர்பான அரச பணியாளர், அருட்சகோதரி கிறிஸ்டெலா A.C என்போர் இந்த அழகான நிகழ்வுக்காக அயராது உழைத்திருந்தனர். ஆகவே ஆயர் உட்பட தோள் கொடுத்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எமது சிரம்தாழ்ந்த நன்றிகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ் ஆண்டுகளுக்கான சான்றிதழ்களையும் பதக்கங்களையும் பெற்றுக்கொண்ட பங்குகளின் பங்களிப்புக்களையும் ஈடுபாட்டையும் சீர்தூக்கிப் பார்க்கின்ற போது திருமலை மறை மாவட்டத்திலேயுள்ள நான்கு பங்குகள் தான் அதிசிறப்பாக செயற்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம்.

ஏனைய பங்குகளின் பின்னடைவுக்குக் காரணம் பங்குத்தந்தையர்களா? மறையாசிரியர்களா? பங்கின் கட்டமைப்பா? அல்லது பெற்றோர் களதும் பிள்ளைகளதும் மறைக்கல்வி / விவிலிய அறிவைப்பெற்றுக்கொள்ள விரும்பாத மெத்தனப்போக்கா?

மறைக்கல்வி நடுநிலையம் இச்சிறந்த கௌரவிப்பு நிகழ்வை முன்னெடுத்ததன் காரணமே பிள்ளைகளையும், மறையாசிரியர் களையும் தட்டிக்கொடுக்கவும் எதிர்காலத்தில் பிள்ளைகளை மறைக் கல்வியிலும் விவிலிய அறிவு போட்டிகளிலும் அதிகம் ஈடுபடுத்தவுமே ஆகும். அந்தவகையில் 2023ஆம் ஆண்டில் மறைக்கல்வி நடுநிலையத்தால் இடம்பெற்ற விவிலிய அறிவுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியிலும் பங்குகொண்டு தேசிய ரீதியில் இடம்பெறப்போகும் போட்டிக்கு தெரிவாகி இருக்கும் மாணவர்களின் தொகை கணிசமான அளவு அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. மறைக்கல்வியின் அவசியத்தை, திருவிவிலிய அறிவின் கட்டாயத்தை முதல் மறையாசிரியர்களான பெற்றோர் தமது தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும் என்பது திருச்சபையின் எதிர்பார்ப்பாகும். ஆகவே எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி பணியாற்றும் மறையாசிரியர்களுக்கு பெற்றோராகிய நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

*அருட்பணி. அ.அ. ஹொஹான் பேனார்ட்*

திருமலைத்தீபம்
மறைக்கல்வி நடுநிலையம்
இல. 297, கடற்படைத்தள வீதி
திருகோணமலை
ஆசிரியர் - 026 2221012
Theepamlink@gmail.com

# "ஓசான்னா"

## ஓர் விமர்சனம்



"ஆண்டவர் பெயரால் அரசராய்
வருகிறவர் போற்றப் பெறுக.
விண்ணகத்தில் அமைதியும்
மாட்சியும் உண்டாகுக. (லூக்கா 19:38)

2023ஆம் ஆண்டின் சித்திரை மாதம் 2 ஆம் நாள் சூரியன் மேற்குத்திசையில் சங்கமமாகும் நேரம். திருகோணமலை புனித மரியாள் பேராலய வளாகத்தில் மக்கள் கூட்டம் மெல்ல, மெல்ல நிரம்பிக் கொண்டு இருக்கின்றனர்.

புனித மரியாள் பேராலய பாடகர் குழுவினரின் இனிய கீதத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும் போது மணி ஏழு பத்து. புனித மரியாள் பேராலய பங்குத்தந்தை அருட்பணி. டன்ஸ்டன் அடிகளார் உரை ஆற்றும் போது 36 வருடங்களுக்கு முன் அருட்பணி நோபட் ஒக்கஸ் அடிகளார் காலத்தில் கிறிஸ்துவின் திருப்பாடுகளின் மேடை நாடகம் அரங்கேற்றப்பட்டதை நினைவுபடுத்தினார்.

இப்போது எமது பங்கின் மறைக்கல்வி மாணவர்கள், ஆசிரியர்கள், பங்குமக்கள் எல்லோரும் இணைந்து இந்நாடகத்தை அரங்கேற்றுகின்றனர் என்றார். அருட்பணி. டன்ஸ்டன் அடிகளார் இவ்வாறான கலைச் செயற்பாடுகளுக்கு ஆதரவு கொடுப்பவர். எதிர்காலத்திலும் அவர் பணி சிறக்கட்டும்.

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை ஆசி உரை வழங்கும் போது "திருப்பாடுகளின் காட்சிகளை மேடைக்கு கொண்டு வருவது இலகுவான விடயமல்ல ஒரு சிறு தவறும் நடக்காமல் செயல்பட வேண்டும். இது வெறும் நாடகம் மட்டுமல்ல சிந்தனைக்கு எடுக்க வேண்டிய விடயங்கள் ஏராளம். இதனை நெறிப்படுத்தி அரங்கேற்றும் கலைஞர்களுக்கும் அதன் பொறுப்பாளர் திரு. இருதயநேசன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்."

தொடர்ந்து திரு. யேசுதாசன் இதயநேசன் இரண்டொரு வார்த்தைகளை முன் வைத்தார். "இரண்டு வாரங்கள் தான் பயற்சி பெற்றோம். அவரவர் குரல் பதிவை செய்ய கலையகம் அழைத்து குரல் பதிவு செய்தோம். இன்று பங்கெடுக்கும் அனைவரின் உழைப்புத்தான் இன்றைய அரங்கேற்றம்" என்றார். ஆரம்ப சம்பிரதாய நிகழ்வுகள் இவ்வாறு நிறைவுற மேடை நாடகத்திற்காக மின்னொளி மேடை எங்கும் பரவியது.

ஓசான்னா பாடலுடன் நாடகம் ஆரம்பமாகின்றது மேடை நிறைந்த கூட்டம் சிறிய வளர்ந்த மாணவர்கள். மறையாசிரியர் இன்னும் பலர் குருத்தோலையை தாங்கிய வண்ணம் மேடையை அலங்கரிக்கின்றனர். இயேசுவும் அவர்கள் மத்தியில் பிரசன்னமாக இருக்கின்றார். காட்சி மாறுகின்றது. இயேசுவைக் கொல்ல சதித்திட்டம் தீட்டப்படும் காட்சி தலைமைக் குருக்களும், மறைநூல் அறிஞர்களும் இதில் பங்கெடுக்கின்றனர். இதில் நடித்த அத்தனை பேரும் தங்கள் பாத்திரத்தை சிறப்பாகச் செய்தனர்.

இயேசுவை காட்டிக் கொடுக்க யூதாஸ் அழைத்து வரப்படுகின்றான். ஆரம்பத்தில் அதை ஏற்றுக் கொள்ளாவிடினும் 30 வெள்ளிக் காசுக்காக சம்மதிக்கின்றான். இந்தக் காட்சியில் யூதாசாக நடித்த கெனடி அலோசியஸ் அவர்களின் நடிப்பு அபாரம், சபையோரைப் பெரிதும் கவர்ந்தார் என்று தான் கூறவேண்டும். காட்டிக்கொடுத்த பின் அதனால் வேதனைப்படும் காட்சியில் "தான் சாகவேண்டும்" என்று கத்திக் கதறி நடித்த காட்சி அற்புதம். அவர் அதில் அதிக நேரத்தை எடுத்துக் கொண்டதால் அவர் தற்கொலை செய்யும் காட்சியை தத்ரூபமாக காட்ட முடியாமல் போனதை அவதானிக்க முடிந்தது. இவ்வாறான குறைபாடுகள் எதிர் காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

விசாரனை நீதி மன்றத்தில் இயேசுவை நிறுத்தி அவர் செய்யாத குற்றங்களை செய்ததாக நிரைப்படுத்திச் செல்லும் காட்சியில் நடித்த அனைவரும் சிறப்பாகவே நடித்தனர். குறிப்பாக இயேசுவின் பாத்திரத்தில் நடித்த செல்வன். சேக்ஸ்பியர் ருஷாந்தன் ஏட்ரியன், தேவதாயின் பாத்திரத்தில் நடித்த செல்வி. சேர்லி பவுஸ்தனா கருணாரத்ண, வெரோணிக்காவாக நடித்த செல்வி. வின்ஸன்ட் வாஷினி, பிலாத்துவாக நடித்த நிக்ஷ் டெரன்ஸ், அன்னாஸ்சாக நடித்த டேவிட் அவர்களும் பரிசேயர்களாக நடித்த அன்டனி டினுசன், நிமால் நிரோஷன் தியாகராஜா சில்வெஸ்டர் ஆகியோர் பாராட்டைப் பெற்றவர்களாவர். ஏனையோரும் சிறப்பாகவே நடித்தனர். பெயர்களைக் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறேன்.



ஓசான்னா மகிமையின் ஊர்வலம் மேடை நாடகத்தில் 110 நடிகர்கள் தலைகாட்டியுள்ளனர். இவர்களுக்கு ஒப்பனை செய்தவர்களை நாம் மறக்கவில்லை. அவர்களையும் பாராட்டுகின்றோம். ஒரே மனிதனாக நின்று தன்னையே அர்ப்பணித்து இந்த மேடை நாடகத்தை அரங்கேற்றிய திரு. ஜேசுதாசன் இதயநேசன் அவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. ஆசிரியராகவும், "அக்குபங்சர்" வைத்தியராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இவரது சாதனைப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

சமய நாடகம், பாஸ்கா நாடகம், வானொலி நாடகம், உரைச்சித்திரம், வீதி நாடகம், தொலைக்காட்சி, இசைக்குழு, யோசேவாசின் நம்பிக்கையின் சுடர் (திரைப்படம்) நீண்ட நாடகமான தேடி வந்த மனிதம் போன்ற தயாரிப்புக்களின் உரிமையாளர் ஆவார்.

2013 ஆம் ஆண்டின் "சாமஸ்ரீ கலாசூரி தேசகீர்த்தி கலைத்துறை விருதினையும், 2019ஆம் ஆண்டில் "தர்ம பிரபாஷ்வரா" என்ற வாழ்நாள் சாதனையாளர் விருதையும் பெற்றுள்ளார். இத்தனை சாதனையின் உரிமையாளர் என்னிடம் கல்விபயின்ற மாணவர் என்பதில் நான் பெருமையடைகிறேன்.

இனியும் நாம் சும்மா இருக்காமல் இவ்வாறான இளம் கலைஞரை நன்கு பயன்படுத்த வேண்டும். பேராலயத்தில் மட்டும் இன்றி ஏனைய பங்கிலும் இவ்வாறான கலைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் இணைத்து ஓர் கலைக்குழுவை அமைத்து திருகோணமலை மறைமாவட்ட பங்குகள் அனைத்திலும் கலை அம்சங்களை வளர்ச்சி அடையச் செய்தல் வேண்டும். இதற்கு அனைத்து பங்குத் தந்தையர்களும், எங்கள் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களும் ஆதரவு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

**திரு. ஜோ. நோமன் பல்தஸார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆயரின் செய்தி தொடர்ச்சி ...**

இரண்டாவது, தேசிய மறைக்கல்விப் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா 22 யூலை மாதம் நடைபெற்றது. இப்போட்டிகள் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் ஒவ்வொரு மறைமாவட்டங்களிலும் நடைபெற்று சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி. றொஹான் பேணார்ட் அடிகள் இந்த நிகழ்வை மறையாசிரியர்களின் ஒத்துழைப்போடு ஒழுங்கு செய்திருந்தார். அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

இது பொதுநிலையினர் ஆண்டு. பொதுநிலை நம்பிக்கையாளர்கள் சிறப்பாக சான்று வாழ்வு வாழ பல திட்டங்கள் தீட்டி செயல்படுத்தும் சிறப்பான வருடமாக இவ்வருடம் அமைகின்றது. பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. டக்ளஸ் ஜேம்ஸ் தலைமையில் பல ஒன்றுகூடல்கள் நடைபெறத் தொடங்கிவிட்டன. யூலை மாதம் 29 ஆம் திகதி திருகோணமலை மறைக்கோட்டத்தில் உள்ள பங்குகளில் ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஐந்து பொதுநிலையினர் அழைக்கப்பட்டு சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது. பயனுள்ளதாக அமைந்த இக்கலந்துரையாடல் ஏனைய மறைக்கோட்டங்களிலும் அனைத்துப் பங்குகளிலும் நடைபெறும்.

இவர்கள் தமது பங்குகளைப் பிரதிநிதித்துவம் செய்து அக்கலந்துரையாடலுக்கு வந்திருந்தாலும் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் இறைபணியில் ஈடுபடுவது அனைவருக்குமான அழைப்பாகும். இதை உணர்ந்து அனைவரும் செயல்பட வேண்டும்.

மரியாவின் விண்ணேற்பு பெருவிழா இம்மாதம் 15 ஆம் நாள். இயேசுவின் தாயாகவும் இன்று எமக்காகப் பரிந்து பேசுபவராகவும் அழைக்கப்பட்ட மரியாவின் அழைப்பு மகத்துவம் வாய்ந்தது. பெண்களுக்குள் ஆசீர்பெற்றவர் நீரே எனும் வானதூதரின் வார்த்தைகள் உண்மையானவை. தனக்குக் கிடைத்த அழைப்பை பணிவோடு ஏற்ற மரியா அதைப் பெருமையாகப் பார்க்காமல் பெரும் பாக்கியமாகக் கருதி நூறு வீதம் தன் பங்களிப்பைச் செய்தார். இன்று மரியன்னையின் வழிகாட்டல், ஆசீர், பரிந்துபேசுதல் எமது ஆன்மீக வாழ்வில் பெரும் சக்தியாக அமைந்துள்ளது.

அருட்பணி. போல் றொபின்சன் அடிகள் இம்மாதம் 18 ஆம் திகதி தனது குருத்துவ வாழ்வில் 25 வருடங்களை நிறைவு செய்கின்றார். தற்போது குருமுதல்வராகவும், எகெட் கரித்தாஸ் இயக்குனராகவும், மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளராகவும் பணியாற்றும் அருட்பணி. போல் றொபின்சன் இறையாசீருடனும் உடல்நலத்துடனும் தன் பணியைத் தொடர வாழ்த்துகின்றோம். ஒரே மறைமாவட்டமாக அனைவரும் எமது அழைப்பையும் பொறுப்பையும் உணர்ந்து செயல்படுவோம்.

**இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.**



# சுதேச குருக்கள் தினம்

சுதேசகுருக்கள் தினத்தை முன்னிட்டு திருகோணமலை இறையிரக்கத் திருத்தலத்தில் 30.07.2023 ஞாயிறு திருப்பலியை திருப்பாலத்துவ சபையினர் சிறப்பித்தனர். அன்றைய திருப்பலியை தேசிய குருமடத்தைச் சேர்ந்த அருட்பணி. யூட் ஜோன்சன் அடிகளாரும், செபமாலை மாதா சபையைச் சேர்ந்த அருட்பணி. ஜெஸ்ரின் ராஜ் அடிகளாரும், இறையிரக்கத் திருத்தல பங்குத்தந்தை அருட்பணி. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாரும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.



# கௌரவிப்பும் பெருமகிழ்வும்

"நன்று நன்று நன்றி உரைப்பது நன்று" (92:1) என்ற திருப்பாடல் வரிகளுக்கு ஏற்ப எமது மறைமாவட்டத்தில் இடம் பெற்ற தேசிய திருவிவிலிய பரிசளிப்பு விழா 22.07.2023 அன்று யூபிலி மண்டபத்தில் மிக விமரிசையாக இடம்பெற்றது. இந்நிகழ்வு காலத்தால் அழிக்க முடியாத வரலாற்று சிறப்பு மிக்க கௌரவிப்பு நிகழ்வாகும். காரணம் எந்த ஒரு மனிதனும் எத்தனை பாராட்டுக்களை எங்கு பெற்றாலும் தன் சொந்த மண்ணில் பெறும் பாராட்டே அவனுக்கு பெருமகிழ்வைக் கொடுக்கும். அந்த வகையில் தேசிய ரீதியாக தொடக்கத்தில் சாகித்திய விழாவாக இடம்பெற்ற கலைப்போட்டி திருவிவிலிய கிறிஸ்தவ விழுமியங்களை வளர்க்கும் போட்டிகள் பின்னர் தேசிய ரீதியான வினாவிடை போட்டியாக வாய்மொழியாக குழுப்போட்டியாக இடம்பெற்றன. பின் 2015 முதல் இப்போட்டிகள் தனி நபர் போட்டியாக வினாவிடை போட்டியும் மற்றும் பேச்சு, கட்டுரை போட்டிகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற மூன்று மொழிப் பிரிவுகளிலும் வருடம் தோறும் நடைபெற்றது. இதில் எமது மாணவர்கள் தொடக்கம் முதல் இன்று வரை திருமலை மண்ணை கௌரவிக்க பல பதக்கங்களையும், வெற்றிக் கிண்ணங்களையும் பெற்று வந்த போதும் அவர்கள் நமது மறைமாவட்டத்தில் வெளிவந்த திருமலைத்தீபம் பத்திரிக்கையில் ஒரு போட்டோவாக மட்டுமே பிரசுரிக்கப்பட்டனர். ஆனால் இவ்வருடம் (2023) எமது மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. றொஹான் பேணார்ட் தனது முழுமுயற்சியால் செய்த கௌரவிப்பு நிகழ்வானது சிறப்பு மிக்க அம்சமாகும். அத்தோடு இவ் கௌரவிப்பானது மறையாசிரியர்களையும் மறைக்கல்வி மாணவர்களையும் ஊக்கப்படுத்தும் செயலாகும். இதற்காக அன்றைய நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட சுமார் 170 மறைக்கல்வி மாணவர்களும் அவர்களது பெற்றோர், பங்கு திருஅவையார், மறைமாவட்ட மறையாசிரியர் சமூகமாக அருட்பணி. றொஹான் பேணார்ட் அடிகளாருக்கு எமது மனம் கனிந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பது சாலச்சிறந்ததாகும். இவ் கௌரவிப்பானது 2018, 2019, 2020 மற்றும் 2022 என்ற நான்கு வருடங்களுக்குமானது. அந்தவகையில் விவிலிய வினாவிடை, கட்டுரை, பேச்சு போன்ற போட்டிகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் பிரிவுகளில் தேசிய மட்டத்தில் பங்கேற்று மறைமாவட்டத்திற்கு 170 மாணவர்கள் பெருமை சேர்த்துள்ளனர். இவர்களோடு அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அன்றைய நிகழ்வில் நமது மறைமாநில ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையும், குருமுதல்வர் அருட்பணி. B. போல் றொபின்சன் அடிகளாரும், கிறிஸ்தவ மதஅலுவலக திணைக்கள பணிப்பாளர் திருமதி. சத்துரி பின்டோ அவர்களும் மற்றும் மறைமாவட்ட குருக்கள், அருட்சகோதரிகள் பங்கேற்று மாணவர்களை வாழ்த்தி கௌரவித்தனர்.

அன்றைய தினத்தில் அனைத்து நிகழ்வுகளும் சிறப்புடன் அமைய பலவிதத்திலும் உதவியாக இருந்த மறைக்கல்வி நடுநிலைய ஊழியர்களுக்கும் எமது நன்றிகள். இவ்வாறான நல்ல செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் பல மாணவர்கள் ஊக்கத்தோடு பங்கேற்பார்கள். என்ற கருத்தை முன்வைத்து உங்கள் பணி சிறக்க எம் வாழ்த்துக்களும் இறை ஆசிகளும் உரித்தாகுக. இயேசுவுக்கே புகழ் மரியே வாழ்க!

K. பிரசாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் தாய் மரியாள்

அன்னையின் இயல்பு ஆண்டவர் இயேசுவை முழுமையாக பற்றிக் கொண்ட இயல்பு. இயேசுவின் மனநிலையும், அன்னை மரியாளின் மனநிலையும் ஒன்றாகவே சென்றது. ஆண்டவருடைய மனநிலை ஏழைகள், இல்லாதவர்கள், நோயாளர்கள் மீது பரிவும் இரக்கமும் கொண்டார். இதை நன்றாக உணர்ந்த அன்னை மரியாள் கானாவூர் திருமணத்திலே மனிதர்களுக்கு ஏற்பட இருந்த அவமானத்திலே இருந்து, அந்த மனிதநேயத்தின் முழு வடிவமாக தன் மகனிடம் ஓடி வந்து மகனே! அவர்களுக்கு இரசம் தீர்ந்து விட்டது என்று சொன்னவர்.



மனிதன் முக்கியம் என்று கருதியதால் தான் கல்வாரி மலையிலே தனது சொந்த மகனாகிய இயேசு படுகின்ற பாடுகளை தாங்கிக் கொண்டும், அத்தனை பிள்ளைகளையும் தனது பாடுகளின் வழியாக மீட்டெடுக்கின்றமீட்பரின் தாயாக நம்மையெல்லாம் கடவுளின் பிள்ளைகளாக பெற்றெடுத்த தாயானவள் அன்னை. ஆகவே இயேசுவைப் போல் அன்னை மரியாளும் மனிதர்களின் முக்கியத்துவத்தை தந்தை கடவுளுக்கு ஒவ்வொரு மனிதரும் எவ்வளவு உயர்ந்தவன், கடவுளுடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் எவ்வளவு முக்கியமானவன் என்பதனால், இயேசு மனிதர்களை மட்டம் தட்டிய, மனிதர்களை அடிமைப்படுத்திய மனிதர்களை, நோயாக்கிய மனிதர்களை, கொன்றொழித்த சாவையும், பாவத்தையும், நோயையும் விரட்டி அவர்களுக்கு முழு விடுதலை அளித்ததை நாம் பார்க்கிறோம்.

ஒரு மனிதன் உணர்ச்சிவசப்படுதல், கோபப்படுதல், வெற்றிக்களிப்பில் மிதத்தல், தோல்வியில் துவண்டு விடுதல், பழிவாங்குதல், அடுத்தவர் மீது பழி போடுதல், எதிலும் எல்லாவற்றிலும் குறை கூறுதல், சில சமயங்களில் பாராட்டுதல், உற்சாகப்படுத்துதல், நம்பிக்கையூட்டிப் பேசுதல் போன்ற பல குணங்களின் கலவையாக மனிதன் இருக்கிறான்.

இந்த குணங்களில் எதை வெளிப்படுத்துகிறானோ அதற்கேற்ப அவனது குணநலம் மதிப்பிடப்படுகிறது. அவன் எப்படிப்பட்டவன் என அறியப்படுகிறது. குறை கூறிக்கொண்டே இருந்தால் என்னடா இது மனிதன் எப்ப பார்த்தாலும் ஏதாவது குறை கூறிக்கொண்டே இருக்கிறான் என்று நம்மை பார்த்துக்கூட சிலர் சொல்லியிருப்பார்கள். தன்னை ஒருவர் மேலானவராக கருதும் போது, மற்றவர்களை விட உயர்வாக கருதும் போது அடுத்தவர்களை இழிவுபடுத்தும் குறைகூறும் நிகழ்வில் முற்படுகிறார். ஒருவனுக்கு எவ்வளவு உயர்ந்த குணங்கள் இருந்தாலும் பிறரைக் குறைகூறும் ஒரு குணம் இருந்தால் அவன் உயிரோடு இருக்கும் போதே இறந்தவனாகி விடுகிறான்.

நம்மில் தவறுகளை வைத்துக் கொண்டு பிறருடைய தவறை எடை போடுவது எப்படி நியாயமாகும். பிறர் புரியும் தவறுகள் நம்மில் இல்லையென்று உறுதியாக சொல்ல முடியுமா? நாமே மன்னிக்கப்பட்ட பாவிகளாக இருக்க பிறர் குற்றங்களை பெரிதுபடுத்தலாமா? பிறரை நம்மைப் போல அன்பு செய்யும் வழக்கம் வளரும் போது தான், குறைகூறும் பழக்கம் இல்லாமல் போய்விடும். குறைகூறுதல் பாவம் என்பதை உணருவோம்.

இன்றைக்கு கிறிஸ்தவர்கள் கூட சக கிறிஸ்தவர்களை, தங்களுடைய வாழ்க்கைத் துணைவியை அல்லது துணைவரை, உறவினர்களை உடன் பிறந்தவர்களை, ஊர்காரர்களை, கிறிஸ்தவ சகோதர சகோதரிகளை, சட்டம், சடங்கு சம்பிரதாயங்களை கெட்டியகாப் பிடித்துக் கொண்டு மற்றவர் மீது குற்றம் சுமத்தும் பிறர் மீது குற்றம் கூறித்திரியும் நிலையை பார்க்கிறோம். மற்றவர்களின் உணர்வுகள் அடிப்படைத் தேவைகள் மட்டில் அக்கறையற்றவர்களாக காணப்படுகின்றனர்.



நம்மை நாம் அன்பு செய்வது போல பிறரை அன்பு செய்ய வேண்டும் என்பதை மனதில் இருத்தி அன்னை அன்பு மகனை நமக்கு பெற்றுத் தந்து, அன்று கானாவூர் திருமணத்திலே நமக்காக பரிந்து பேசியவர், கல்வாரியிலே அன்னை மரியாள் நமக்காக ஆண்டவர் இயேசுவிடமிருந்து அவளுடைய பிள்ளையாகும் பேற்றைப் பெற்றுக் கொண்டவள். இன்று வரை அண்டிவரும் அனைவரையும் அணைக்கின்றவளாக தேடி வரும் அனைவருக்கும் தேற்றரவாக, ஓடி வரும் அனைவரையும் வெறுங்கையராய் அனுப்பாமல் இருக்கிற அன்னை வழியாக ஆண்டவர் இயேசுவின் இயல்புகளை அவரிடமிருந்து கற்றுக் கொண்டு அன்னை மரியாளுடைய அத்தனை பண்புகளும் இயேசுவிடமிருந்து வந்த பண்புகள் என்பதை உணர்ந்தவர்களாக! கருணையும், இரக்கமும், அன்பும், அக்கறையும் அடுத்தவர் மட்டில் இரக்கமும் உடையவர்களாக இருப்போம்.

**மறைத்திரு. மரிய அந்தோணிராஜ்**
**பாளையம் கோட்டை**
**மறைமாவட்டம்**

---

### நான் இறந்த பின் அல்ல – இப்போதே....

**ரவீந்திரநாத் தாகூர்**



நான் இறந்தவுடன்
உன் கண்ணீர் வழியும்
ஆனால் எனக்கு

தெரியாது
இப்போதே என்னுடன்

அழுங்கள்!

நீங்கள் பூக்களை
அனுப்புவீர்கள்
ஆனால் நான் பார்க்க மாட்டேன்
இப்போதே அனுப்புங்கள்!

பாராட்டு வார்த்தைகள்
சொல்வீர்கள்
ஆனால் நான் கேட்க மாட்டேன்.
இப்போதே என்னைப்
பாராட்டுங்கள்!

என் தவறுகளை மன்னிப்பீர்கள்
ஆனால் எனக்கு தெரியாது...
எனவே அவற்றை இப்போதே
மறந்து விடுங்கள்!

நீங்கள் என்னை இழப்பீர்கள்,
ஆனால்
அன்று நான் உணர மாட்டேன்
இப்போதே என்னைச் சந்தியுங்கள்!

இன்று நீங்கள் என்னுடன்
அதிக நேரம்
செலவிடலாம்,
பதிலாக நான் வாழும்போதே
அதைச் செய்யுங்கள்

நான் போய்விட்டேன் என்று
நீங்கள் அறிந்தபோது, இரங்கல்
தெரிவிக்க என் வீட்டிற்கு
வழியைக் கண்டுபிடிப்பீர்கள்,
ஆனால் நாங்கள் பல ஆண்டுகளாகப்
பேசவேயில்லையே!
இப்போதே வாருங்கள்.... பேசுங்கள்...
கேளுங்கள்... எனக்குப் பதிலளியுங்கள்!

உங்களைச் சுற்றியுள்ள
ஒவ்வொருவருடனும் நேரத்தைச்
செலவிடுங்கள்...
உங்கள்
குடும்பத்தினர், நண்பர்கள்
மற்றும் அறிமுகமானவர்களை
மகிழ்விக்க உங்களால் முடிந்த
உதவிகளை அவர்களுக்குச்
செய்யுங்கள்.

அவர்களை நெருக்கமாக
உணருங்கள், ஏனென்றால்
காலம் எப்போது அவர்களை
உங்களிடமிருந்து பறிக்கும்
என்று உங்களுக்குத் தெரியாது.

நான் தனியாக 'செல்ல' முடியும்
ஆனால் நாம் ஒன்றாகப் 'பேசுவோம்'
என்னால் தனியாக 'மகிழ' முடியும்
ஆனால் நாம் சேர்ந்து 'கொண்டாடுவோம்'
என்னால் தனியாகச் 'சிரிக்க' முடியும்
ஆனால் நாம் ஒன்றாகச் 'சிரிப்போம்'
இதுதான் மனித உறவுகளின் அழகு.

ஒருவருக்கென்றொருவர் இல்லாமல்
நாம் ஒன்றுமில்லை...
எனவே இணைந்திருப்போம்!!

தமிழில் – அருட்பணி . றொஹான் பேனார்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைகளைக் களைவோம்!

ஆகஸ்ட் மாதமானது அன்னையின் மாசற்ற இதயத்திற்கு ஒப்புக் கொடுக்கப்படுகின்றது. இந்த மாதத்தில் அன்னையின் அன்பைப் பற்றியும், அவரது தூய்மையைப் பற்றியும் நாம் சிறப்பாக சிந்திக்கின்றோம். இந்த மாதத்தில் நாமும் அன்னை மரியைப் போன்று தீமைகள் களைந்து நன்மைகளை மட்டும் நம் மனதில் கொண்டிருக்க முயற்சி செய்வோம்.

ஆண்டவர் இயேசு ஒரு உவமை கூறுகின்றார். நிலம் மிகவும் நன்றாக விளைந்து கொண்டிருக்கின்றது. அந்த நிலத்தில் திடிரென்று களைகள் தோன்றுகின்றன. இப்போது பயிர்களை விட களைகள் மிகவும் வேகமாக வளர்கின்றன. நிலத்தில் தானாக வளர்ந்த களைகள் உவமையில் நம் மனதில் தீய எண்ணங்கள் எப்படி உருவாகின்றன என்பதை நாம் ஆராய வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றார். அந்த எண்ணங்கள், தீயோனால் நம் உள்ளத்தில் விதைக்கப்படுகின்றன. ஆனால் பயிரை விட களைகளே வேகமாக வளர்கின்றன என்ற உண்மையையும் விவிலியத்திலே நாம் வாசிக்கின்றோம்.

நம் உள்ளத்தில் தீமைகள் ஏன் வேகமாக வளர வேண்டும், நன்மைகள் ஏன் மெதுவாக வளர வேண்டும்?

## இன்னுமா தயக்கம் – 28



புனித பவுலடிகளார், “தீமை செய்யும் எவனும் அந்தத் தீமைக்கு அடிமையாகிறான்” என்று கூறுகின்றார். எனவே தீமைகளை யாரும் தேவை என்று வளர்க்க வில்லை, மாறாக அந்தத் தீமையே தன்னை வளர்க்கச் சொல்லி தீமை செய்தவர்களை கட்டாயப்படுத்துகின்றது.

அன்னை மரியாள் இந்த களைகளை, அதாவது தீமைகளை தன் உள்ளத்தில் விதைக்கப்பட்டாலும் அவை அதன் மூலமாக தன் மனதில் வளராமலும் காத்துக் கொண்டார். இது எப்படி சாத்தியமாகும்? ஆண்டவர் அன்னை மரியாவை அதனால் பாவமாசின்றி அமல உற்பவமாக படைத்திருந்தார். எனவே அன்னை மரியாவுக்கு இது சாத்தியமானது. ஆனால் நாம் அன்னையைப் போன்று அமல உற்பவியாக படைக்கப்படவில்லை என்ற கேள்வி எழலாம்.

இந்த உலகில் படைக்கப்பட்ட அனைவருமே அமல உற்பவத்தில் தான் படைக்கப்பட்டுள்ளார்கள். இந்த உலகில் பிறந்த அன்னை மரியாள் அமல உற்பவியாக இருக்க முடியும் என்றால், நாமும் அமல உற்பவியாக இருக்க முடியும் என்பதே இதன்



பொருளாகும். காரணம், அன்னை மரியாள் நமக்கு துாய வாழ்வின் முன்மாதிரியாக கொடுக்கப்பட்டுள்ளார். அவரைப் பின்பற்ற நாம் அழைக்கப்பட்டுள்ளோம். ஒருவேளை அன்னை மரியாள் நம்மை விட வித்தியாசமான படைப்பு என்றால் நாம் அவரைப் பின்பற்ற முடியாது. ஆனால் நாமும் அன்னை மரியாவைப் போன்று தான் படைக்கப்பட்டுள்ளோம். எனவே அன்னை மரியாவை நாமும் பின்பற்ற முடியும் என்பதே தாய்த் திருஅவையின் அழைப்பாக இருக்கின்றது.

அனுபவப் பூர்வமாக நாம் இதை நம் வாழ்வில் பார்க்கலாம். ஒரு தீமை நம் அருகில் நடக்கின்றது என்றால் நாம் பதைபதைக்கின்றோம். மணிப்பூரில் நடைபெறும் கலவரங்கள் நம் மனதில் ஏதோ தாங்க முடியாத ரணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அது போல நாமும் ஒரு தீய செயலைச் செய்கின்றோம் என்றால் நம் மனம் பதைபதைக்கின்றது. தீமை செய்துவிட்டு நம்மால் நிம்மதியாக இருந்துவிட முடியாது. இவையெல்லாம், நாம் நன்மை நாடியவர்களாக இருக்கின்றோம் என்பதற்கான அறிகுறிகளாகும். அதாவது நாம் தீமையைச் சார்ந்தவர்களாக அல்ல, மாறாக நன்மையை நாடியவர்களாகவே படைக்கப்பட்டுள்ளோம். மனிதன் நன்மையை நாடவேண்டும் என்பதே இறைவனின் படைப்பு. எனவே நம் இயல்பின் படி நாம் தீய நாட்டம் கொண்டவர்களல்ல, மாறாக நன்மையை மட்டுமே நாடுபவர்கள், இறைவன் நம் உள்ளத்தில் நல்ல விதைகளையே விதைத்துள்ளார். அந்த விதைகளும் நம் மனதில் வளர்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இடையில் அலகை வந்து நம் உள்ளத்தில் தீயனவற்றை விதைத்து விடுகின்றான். அவனை நாம் அனுமதிப்பதும் அனுமதியாமல் விடுவதும் நம் முடிவைப் பொறுத்ததே. நாம் நம் மனசாட்சியின் குரலுக்கு தொடர்ந்து செவிசாய்த்துக் கொண்டிருந்தோம் என்றால், அலகை நம் உள்ளத்தில் தீயனவற்றை விதைக்க முடியாது. ஆனால் நாம் பல வேளைகளில் நம் மனசாட்சிக்கு செவிமடுக்க மறந்து விடுகின்றோம். எனவே அலகை அந்த அறியாத நேரத்தில் உள்ளே நுழைந்து விடுகின்றான். அவன் ஒரு முறை உள்ளே நுழைந்துவிட்டால் நம்மை அவன் தனக்கு அடிமைப்படுத்தி விடுகின்றான்.

இவ்வாறு தீமைகளில் நம்மை நாம் விழவிடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நம் கடமை. இறைவன் நமக்கு எப்போதும் துணை நிற்கின்றார். அவர் நம் தீமைகளில் விழும் தருணம் வரும் போது நம்மை எச்சரிக்கின்றார். நமக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்குகின்றார். அவரது ஆலோசனைகளை நாம் கருத்தில் கொண்டால், நமக்கு தேவையான அனைத்து சூழல்களையும் வாய்ப்புக்களையும் நமக்கு உருவாக்கித் தருகின்றார். நாம் அவரது பராமரிப்பில் வாழ வருகின்றோம். ஆனால் அந்த எச்சரிக்கைகளையும் நாம் உதாசீனம் செய்யும் போது தான் எழ முடியாத பாவத்தில் நாம் விழுந்துவிடுகின்றோம்.

அன்னை மரியாள் தனது வாழ்வில் இறைவனின் குரலுக்கு தொடர்ந்து செவிமடுத்து வாழ்ந்தார். எனவே தன் ஆன்மாவை கறை ஏதுமில்லாமல் காத்துக்கொண்டார். இன்று நமக்கு ஒரு மிகப்பெரிய சவால் கொடுக்கப்படுகின்றது. நாம் ஏற்கனவே சில பாவங்களில் விழுந்துவிட்டோம். அந்த பாவங்களிலிருந்து எப்படி வெளியே வருவது? நம்மை அலகை அடிமைப்படுத்தி விட்டானே, அந்த அடிமை நிலையிலிருந்து நாம் எப்படி வெளியே வருவது? என்ற பல கேள்விகள் நம் மனதில் எழலாம்.

அன்பார்ந்தவர்களே, அலகையின் பிடியில் நாம் தான் நம்மை உட்படுத்திக் கொண்டுள்ளோம். ஒருவேளை நான் இனி இந்த பிடிகளிலிருந்து விடுபடப் போகின்றேன் என்று முடிவெடுத்தால், நிச்சயம் நாம் இந்தப்பிடிகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளலாம். இதனால் தான், “ஒவ்வொரு புனிதருக்கும் ஒரு இறந்த காலம் உண்டு, ஒவ்வொரு பாவிக்கும் ஒரு எதிர்காலம் உண்டு! என்று நாம் பழமொழி கூறுகின்றோம். அதாவது, புனிதர்களாக இருக்கும் ஒவ்வொருவருக்கும், பாவியாக இருந்த ஒரு இறந்த காலம் ஒன்று உண்டு அது போல இப்போது பாவியாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் புனிதராக வாழக்கூடிய எதிர்காலமும் ஒன்று உண்டு என்பதே அதன் கருத்தாகும். அப்படியானால், பாவ நிலையிலிருந்து நாம் புனித நிலைக்கு நம்மை உயர்த்திக் கொள்ள முடியும். எவ்வளவு தான் பாவம் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்தாலும் நாம் அந்த அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள முடியும்.

அப்படி அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள முதலில் நாம் நம் அடிமை நிலையை உணர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். அத்தோடு, நாமும் புனித நிலைக்கு திரும்ப வேண்டும் என்ற முடிவை நம் மனதில் ஏற்க வேண்டும். ஒவ்வொரு புனிதருடைய வாழ்விலும் இத்தகைய மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதை வரலாற்றில் நாம் தெளிவாகக் காணலாம்.

இதற்கு நமக்கு முக்கிய தேவை, நம் “நான்” என்ற எண்ணத்திலிருந்து விடுதலை. இந்த அகந்தை எண்ணத்தைக் கைவிட்டால் தான், நமது அடிமை நிலை நமக்கு புலப்படும். அகந்தை எண்ணத்தைக் கைவிட்டால் தான், அடிமை நிலையை நாம் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு உருவாகும். அப்போது தான், நாம் அந்த பாவ நிலையிலிருந்து விடுபடும் எண்ணமும் நமக்கு உருவாகும். இது நாம் நம் வாழ்வில் பின்னோக்கி நடைபோடும் ஒரு தாழ்ச்சி மனப்பான்மையாகும். நான் எடுத்த முடிவு தான் சரி என்று முன்னோக்கி மட்டும் சென்று கொண்டிருக்கும் நிலையில், நமது முடிவுகளை சீர்தூக்கிப் பார்த்து, சில முடிவுகளிலிருந்து நாம் பின்னோக்கி நடந்து அந்த முடிவுகளை நம் வாழ்விலிருந்து களைவதில் இந்த தாழ்ச்சி அடங்கியுள்ளது.

இன்று அன்னை மரியாவை நம் எடுத்துக் காட்டாகக் கொண்டு நம் வாழ்வில் முன்னேறுவோம். நம் மனசாட்சியின் குரலுக்கு செவிமடுக்க ஆரம்பிப்போம். அப்போது நமக்கு சில நிலைகளில் முன்னேறவும் சில நிலைகளில் பின்தங்கவும் நமக்குத் தெளிவு கிடைக்கும்.

இறையாசீருடன்
அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினேழு, பதினெட்டு வயதில் காதல், திருமணம் என்பது உண்மையிலே அபத்தம். இந்த வயதில் தான் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தங்கள் உடலில் ஏற்படும் இயற்கையான மாற்றங்களையும், மனதளவில் உண்டாகும் உணர்ச்சிகளையும், உறவு முறைகளின் விளைவுகளையும் பற்றிப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கின்றனர். ஆனால் தனிப்பட்டவருக்குள் ஏற்படும் மாற்றம் கலாச்சார, அறநெறி மற்றும் மத ரீதியான தாக்கங்களில்தான் வளரத் தொடங்கும்.

- பெண்களுக்கும் ஆண்களுக்கும் உணர்ச்சியளவில், உணர்வுக்கலாசார மற்றும் அறநெறி அடிப்படைகளில் என்ன வித்தியாசங்கள் உள்ளன?
- ஏன் நான் கட்டுப்பாடு இழந்து செயற்படுகின்றேன்?
- என் சக்தியை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப்போகின்றேன்?
- நான் கர்ப்பமாகி விட்டால் என்ன நடக்கும்?
- ஏன் தோல்வியடைந்து நட்பு, காதல் மனதை இவ்வளவு பாதிக்கின்றது?

உங்களை உண்மையிலே மதிக்கலாம். மிகப் பொறுமையுள்ள ஒரு நண்பனைக் கூட உங்கள் கோபத்தால் இழந்து விடலாம். வாழ்க்கையில் வெற்றியையும், மகிழ்ச்சியையும் ஒன்றுசேர அனுபவிக்க விரும்பினால் உங்கள் பழக்கமும் பழகும் விதமும் நல்ல உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

சாமுவேல் ஸ்மைல்ஸ் பின்வருமாறு கூறுகின்றார் "எண்ணத்தை விதையுங்கள், செயலை அறுவடை செய்வீர்கள். செயலை விதையுங்கள், பண்பை அறுவடை செய்வீர்கள். பண்பை விதையுங்கள், விதியை அறுவடை செய்வீர்கள்" நம்மை உருவாக்குவதும், அழிப்பதும் பழக்கங்கள்தான், உதாரணத்திற்கு தினமும் உடற்பயிற்சி செய்வது, முன் கூட்டியே திட்டமிடல், மற்றவர்களை மதிப்பது, நல்ல பழக்கங்கள், மற்றவர்களை குறை கூறிக்கொண்டே இருப்பது, தன்னைப்பற்றி மிக மோசமாக நினைப்பது, சோம்பேறித்தனமாக இருப்பது, தொலைக்காட்சியே கதி எனக் கிடப்பது மிக மோசமான பழக்கங்கள் தான். நல்ல வேளையாக உங்கள் பழக்கங்களை விட நீங்கள் அதிக பலமுள்ளவர்கள். நல்ல பழக்கங்களை

## இளையோர் பக்கம் அங்கம் - 9

இவர்களெல்லாம் இப்படித்தான் இருக்க வேண்டுமா? இல்லை கட்டாயமாக மாறலாம் மாற வேண்டும். அப்போதுதான் வாழ்வின் வசந்த காலத்தை அனுபவிக்க முடியும்.

முதலில் நீங்கள் மாறவேண்டும் என விரும்ப வேண்டும். உங்களை நீங்கள் விரும்பும் வகையில் மற்றவர்களும் விரும்பும் வகையில் நல்ல பழக்கங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என உறுதி கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக உங்களுடைய பழைய பழக்கங்கள் நீங்கள் வாழும் வட்டத்தை விட்டு வெளியே வரவேண்டும் (இதற்கு நல்ல நண்பர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் உதவியை நாடலாம்) நல்ல உடற்பயிற்சி செய்வது, தினமும் பாடங்களைப் படித்து முடிப்பது. துணிகளை, உடுப்புக்களை அழகாக அடுக்கி வைப்பது, போட்டிகளில் பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்வது தமது கருத்துக்களைத் தெரிவிப்பது. நெருங்கியவர்களின் பிறந்த நாளுக்கு வாழ்த்து மடல் அனுப்புவது,

# பாலியல் வளர்ச்சி

### ரீன் ஏஜ் பருவத்தினரின் அடையாளத்தைக் கண்டுபிடிக்கும் கருவின் நோக்கம்


இத்தகைய கேள்விகளுக்கு விடைகாணத் தொடங்கும் போது ஒருவன் தன்னையே அடையாளம் கண்டு கொள்கின்றான். ரீன் ஏஜ் பருவத்தினரின் பாலியல் வளர்ச்சிதான் அவர்களின் அடையாளத்திற்கும், உறவிற்கும் அடிப்படையானது. உங்கள் பாலுணர்வை மகிழ்ச்சியாக ஆரோக்கியமாக ஏற்றுக்கொள்ளும் போது உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கின்றது. உங்கள் படைப்பாற்றலும், திறனும் அசர வைக்கும் வகையில் வளரும். அதேசமயம் உங்கள் பாலுணர்வு தீய நாட்டம் கொண்டு உடல் பயன்படுத்தப்பட்டது எனில் அதன் ரணம் ஆறாது, வடு மறையாது. Sexual abuse எண்ணற்ற ரீன் ஏஜ் பருவத்தினரை அழித்திருக்கிறது. முக்கியமாக அவர்களுடைய உள் அடையாளத்தை பதினெட்டு வயதில் கர்ப்பம், கருக்கலைப்பு என்பது குழப்பத்தில் ஆழ்த்தி தன் சுய மரியாதையை இழக்க வைக்கின்றது.

ரீன் ஏஜ் பருவத்தினரைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில் அவர்களின் போட்டி மனப்பான்மையை, ஏன் வெற்றி பெற விரும்புகின்றார்கள் என்பதையும் புரிய முயற்சிக்க வேண்டும். இன்றைய போட்டி உலகில் வெற்றி பெறுபவன் என்பவன் அதிக செல்வமும், அதிகாரமும் உடையவன். ரீன் ஏஜ் பருவத்தினரில் நிறையப் பேர் இப்போட்டியில் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் திளைக்க வேண்டுமென விரும்புகின்றார்கள். இவர்களின் இலக்குகள் நட்சத்திரங்களைத் தொடுபவை இவர்கள் நம்புகிற கொள்கைகளில் அதிக பிடிப்புடன் இருப்பார்கள் தினசரி வாழ்க்கைக்கு தீர்மானங்கள் எடுப்பதில் தயக்கமும், தோல்வியும் இருந்தாலும் வாழ்க்கை பற்றிய உயரிய எண்ணங்களை விவாதிப்பவர்கள் அதற்காகப் போராடுவார்கள். எரிக் எரிக்சன் (Erik Erikson) என்ற உளவியல் அறிஞர் கூற்றுப்படி நோக்கம் தான் ரீன் ஏஜ் பருவத்தினரின் அடையாளத்தைக் கண்டுபிடிக்க உதவும் மிகப் பெரும் கருவி.

வாழ்க்கையின் வெற்றியையும், தோல்வியையும் நிர்ணயிப்பது ஒருவரின் பழக்க வழக்கங்கள் தான். கிராமத்தில் பிறந்தாலும் கடின உழைப்பால் தேசிய அளவில் உலகளவில் புகழ்பெற்றவர்கள் உண்டு. பெற்றோர் படித்த நல்ல அந்தஸ்தில் இருந்தாலும் 20 வயதில் கொலை செய்துவிட்டு கம்பி எண்ணிக் கொண்டிருக்கலாம். வாழ்க்கையின் மகிழ்ச்சியையும், சோகத்தையும் நிர்ணயிப்பது உங்கள் பழக்க வழக்கம் தான். யாரையுமே எடுத்தெறிந்து பேசும்

வளர்த்துக்கொள்ளும் போது உங்கள் செயற்திறனும், அதிகரிக்கும் உங்கள் மீது மரியாதையும் அதிகரிக்கும் மற்றவர்கள் விரும்புகிறவர்களாக நீங்கள் இருப்பீர்கள்.

எப்போதும் சுத்தமாக இருப்பது, நகங்களை நேர்த்தியாக வெட்டியிருப்பது, இரைந்து பேசாமல் இருப்பது, அளவுக்கதிகமாக உண்ணாமல் இருப்பது, நல்ல புத்தகங்களைப் படிப்பது, மற்றவர்கள் பேசும்போது உன்னிப்பாக கவனிப்பது, என நல்ல பழக்கங்களை நீங்கள் வளர்த்துக்கொள்ளும் போது உங்கள் சிந்தனைகளும் உயர்வாக இருக்கும். உங்கள் நடவடிக்கைகளில் ஒரு கம்பீரம் தெரியும். பெரும் நிறுவனங்களிலும், அரசிலும் நான்கு Deciplined ஆன பெரும் பொறுப்புகள் காத்திருக்கின்றன. அவர்களும் இதைச் சிறப்பாகச் செய்வார்கள்.



உங்கள் நண்பரின் அறைக்குச் செல்கின்றீர்கள். படு அசுத்தம் பொருட்களும் உடுப்புகளும் பரந்து கிடக்கின்றன. ஆளும் படு சோம்பேறி, ஆனால் வேலை முடியாவிட்டால் பதட்டமாகி விடுவார். மற்றவர்களுக்கும் இவரால் மன உளைச்சல் இவருடைய மோசமான பழக்கவழக்கத்தால் உறவு முறைகளும் பாதிக்கப்படுகின்றன.

உங்கள் தோழிக்கு வேறு பிரச்சினை அவர் எதிலும் பங்கேற்க மாட்டார். தன் மீது துளியும் நம்பிக்கை கிடையாது. மற்றவர்களிடம் இயல்பாக சுலபமாகப் பேசமாட்டார். தயக்கம், பயம், குறுகிய வட்டம் என இருக்கும் அவளுக்கும் வாழ்க்கையில் பெரும் இலட்சியமும் கிடையாது. மகிழ்ச்சியும் கிடையாது

கடிதங்களுக்குப் பதில் எழுதுவது. அழைக்கும் பொதுவிடயங்களுக்கு மறுப்புத் தெரிவிக்காமல் செல்வது. நாகரீகமான மென்மையான நிறங்களில் ஆடை அணிவது போன்ற நல்ல பழக்கங்களைத் தொடர்ச்சியாகப் பின்பற்ற வேண்டும்.

மூன்றாவதாக நல்ல பழக்க வழக்கங்களை உடையவர்களை நண்பர்களாகக் கொண்டிருப்பதும், நல்ல சூழ்நிலையில் வாழ்வதும் மிக மிக அவசியம் "முதலில் நாம் பழக்கவழக்கங்களை உருவாக்குகின்றோம். பின்பு பழக்கங்கள் நம்மை உருவாக்குகின்றன" என்கிறார் ஓர் ஆங்கிலக் கவிஞர் "We first make our habits then or habit makes us" உங்களுடன் என்றும் இருக்கும் தோழன் நான். மிகப் பெரும் உதவியாகவும், மிகப் பெரும் சுமையாகவும் இருப்பவன் நான். உங்களை முன்னேற்றுவதும் கீழே தள்ளுவதும் நான் தான். ஆனால் உங்கள் சொற்படி தான் நடப்பேன்.

நீங்கள் மட்டும் கண்டிப்பாக இருந்தால் போதும் என்னைச் சுலபமாக கைக்குள் போட்டுக்கொள்ளலாம் எப்படிச் செய்வது எனக்கு சில முறை சொல்லிக் கொடுத்தாலே போதும். பிறகு நான் தன்னிச்சையாகச் செய்யத் தொடங்கி விடுவேன். எல்லா உயர்ந்த மனிதர்களின் பணியாள் நான். அதேபோல் வீழ்ந்தவர்களின் பணியாளும் நான் தான்.

நான் இயந்திரமல்ல, எந்திரனும் அல்ல ஆனால் இயந்திரம் போன்ற நுணுக்கத்துடன் வேலை செய்ய முடியும். என்னால் உங்களுக்கு இலாபமோ நஷ்டமோ அதை பற்றிக் கவலையில்லை. என்னைத் தூக்கிப் பயிற்சி கொடுங்கள். கண்டிப்புடன் இருங்கள். உலகத்தையே உங்கள் காலடியில் கொண்டு சேர்க்கின்றேன். ஆனால் என்னிஷ்டத்திற்கு என்னை விட்டு விட்டீர்கள் என்றால் உங்களை அழித்து விடுவேன்.

நான் யார் தெரிகின்றதா? நான் தான் "நல்ல பழக்க வழக்கங்கள்"

அருட்சகோதரர் சு. ஜோசப் ஜெயகாந்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருமணம்


அருட்பணி. அ.அ. நவரெத்தினம்
சிரேஸ்ட விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

திருமணத்தை ஒரு கோட்டைக்கு ஒப்பிடலாம். கோட்டைக்கு வெளியே இருப்பவர்கள் எப்படியாவது கோட்டைக்கு உள்ளே செல்ல முயற்சிக்கிறார்கள். கோட்டைக்கு உள்ளே இருப்பவர்கள் அந்தக் கோட்டையைவிட்டு வெளியேற ஏதாவது வழியுண்டா என்று யோசிக்கிறார்கள் என்று திருமணத்தைப் பற்றி நகைச்சுவையாகச் சொல்வதுண்டு. இக்கூற்று ஓர் உண்மையைச் சுட்டிக் காட்டுகிறது. திருமண வாழ்வு கவர்ச்சிகரமான ஒன்று. அதேசமயம் சவால்கள் நிறைந்த ஒன்று.

மனித வாழ்வு அன்பில்தான் நிறைவு பெறுகிறது. வயது வந்த இரு மனித உள்ளங்கள் ஒருவர் மற்றவருக்கு அன்பை வழங்கவும், ஒருவர் மற்றவரிடம் இருந்து அன்பைப் பெறவும் உரிய மனித நிறுவனமே திருமணம். அன்பைப் பெறுவதிலும், அன்பைத் தருவதிலும்தான் மனித வாழ்வு நிறைவு பெறுகிறது. எனவே, திருமண வாழ்வு மனித வாழ்வுக்கு நிறைவை வழங்கும் ஒரு மனித நிறுவனமாக அமைகிறது. எனவேதான் வயது வந்த இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் இது சீக்கிரமே பிடிக்க வேண்டிய கோட்டையாக மாறுகிறது.



அதேசமயம் திருமண வாழ்வு நிறைய சவால்களைச் சந்திக்கும் வாழ்வாக அமைகிறது. இச்சவால்கள் உள்ளும் புறமும் இருந்து வருகின்றன. கணவன், மனைவி ஆகிய இரு மனிதர்களின் உணர்ச்சி மோதல்கள், முதிர்ச்சியின்மை, வாழ்வு பற்றிய சரியான புரிதலின்மை ஆகியவை அகச் சவால்களுக்கு ஒரு சில உதாரணங்கள். புறச் சவால்கள் என்று கூறும் பொழுது மாமியார், மாமனார், இன்னும் பல நெருங்கிய உறவினர்களிடமிருந்து வரும் பிரச்சனைகள். மறைக்கல்வி வகுப்பில் ஆசிரியர் மாணவர்களிடம்“புதிய ஏற்பாட்டில் சிறந்த குடும்பம் எது?”என்று கேட்டார். உடனே“திருக்குடும்பம்”என்று பதில் வந்தது.“பழைய ஏற்பாட்டில் சிறந்த குடும்பம் எது?”என்று கேட்டார்.“ஆதாம் - ஏவாள் குடும்பம்”என்று மாணவர்கள் பதில் சொன்னார்கள். ஏனென்று ஆசிரியர் கேட்டார்.“இரண்டு குடும்பத்திலும் மாமியார் இல்லை”என்று மாணவர்கள் பதில் சொன்னார்கள். இவ்வாறு கணவன் - மனைவி ஆகிய இருவரின் குடும்பங்களே திருமண வாழ்வுக்கு சவாலாக அமைந்து விடுகின்றன. நாம் வாழும் சமூகமும் புறச்சவால்களில் ஒன்றாக மாறுகிறது.



நண்பர்கள், குடும்பத்தார், வறுமை, ஊடகம் போன்ற சமூகக் கூறுகளும் திருமண வாழ்வைப் பெரிதும் பாதிக்கும் காரணிகளாக மாறிவிடுகின்றன. குறிப்பாக இன்றைய சின்னத்திரை தொடர்கள் கணவன் - மனைவி ஆகிய அந்தரங்க உறவை ஊனமாக்கும் காரணிகளாக மாறி வருகின்றன.



எத்தனையோ சவால்களைச் சந்தித்தாலும் மனித முறையிலும், இறைத் திட்டத்தின் அடிப்படையிலும் திருமண வாழ்வுக்கு மாற்று ஏதும் இல்லை. தனிநபர் ஒழுக்கம், சமூகப் பாதுகாப்பு, எதிர்கால சந்ததி பெருக்கம் ஆகிய தனி மனித, சமூக நலன்களைப் பேணும், பாதுகாக்கும் அமைப்பு திருமணமேயாகும். எனவேதான் திருமணத்தை 'ஆயிரங்காலத்துப் பயிர்'என்று சொல்லி வைத்தார்கள் தமிழர்கள்: எல்லாக் காலங்களுக்கும் தேவையான ஒரு வாழ்க்கை நிலை திருமணம். சிறிய விதிவிலக்கு மணத்துறவு, துறவறமாகும்.

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவன் எவன்'(குறள் 46)

அறநெறிப்படி இல்வாழ்க்கையை ஒருவன் நடத்தி வருவானானால், அவன் பேறு நெறியில் போய்ப் பெறுவது என்ன? என்ற வார்த்தைகளில் வள்ளுவர் பெருந்தகை திருமணத்தின் மாண்பைப் போற்றுகிறார். சங்ககாலந் தொட்டு இன்று வரை தமிழ்ச் சமூகம் திருமணத்தைப் பெரிதும் போற்றி வந்துள்ளது.

எல்லா சமூகங்களிலும் திருமணத்திற்கு ஒரு முக்கிய இடமுண்டு. நிறைய விவாகரத்துக்களைச் சந்திக்கும் ஐரோப்பிய, அமெரிக்க சமூகங்கள்கூட திருமண வாழ்வை நிலைப்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பெரிதும் தேடிக் கொண்டிருக்கின்றன. கிறிஸ்தவம் தவிர்த்த பிற சமயங்களில் திருமணம் சிறந்த வாழ்க்கை ஒப்பந்தமாக ஏற்கப்பட்டு போற்றப்பட்டு வந்துள்ளது. கிறிஸ்தவமும் திருமணத்தை மனித நோக்கில் ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகவும், இறைதிட்டத்தின் அடிப்படையில் அதனை ஓர் உடன்படிக்கையாகவும் ஏற்று வாழ்ந்து வந்துள்ளது.

நன்றி: வாழ்வளிக்கும் அருளுடையாளுங்கள்

## படித்ததில் பிடித்தது



# மூட்டை

அது அவனது நெடுநாள் ஆசை
“வேளாங்கன்னி மாதாத் திருத்தலத்தில்
ஒரு வாரம் தங்க வேண்டும்.”

ஆசை நிறைவேறும் நாள் வந்தது.
மூட்டை முடிச்சுகளோடு புறப்பட்டான்.
வேளாங்கன்னி நகரை அடைந்தான்.
அறை எடுத்தான்.

மூட்டை முடிச்சுக்களை அறையில் வைத்து விட்டு
அன்னையை வணங்கித் திரும்பினான்.
களைப்போடு படுத்தவனுக்குத் தூக்கமில்லை.
அறையெங்கும் ஒரே மூட்டைப் பூச்சிகள்.
கடி தாங்க முடியவில்லை.

அறையை மாற்ற முடிவு செய்தான்.
மூட்டை முடிச்சுகளைக் கட்டினான்.
அறையை மாற்றினான்.

அங்கேயும் மூட்டைப் பூச்சிகள், தூங்க முடியவில்லை:
'சே.. இங்கேயும் மூட்டையா……!'
முணுமுணுத்தான்.

மீண்டும் மூட்டையைக் கட்டினான்.
வேறு விடுதிக்குச் சென்றான்:
'மூட்டைப் பூச்சியில்லா அறை வேண்டும்'

அப்போதுதான் கட்டி முடித்த புத்தம் புதிய அறையைத் தந்தார்கள்.
மூட்டை முடிச்சுக்களை வைத்துவிட்டு, குளித்து முடித்தான்.
நிம்மதியாய் படுக்கப் போனவனுக்கு ஒரே அதிர்ச்சி.

அங்கேயும்… மூட்டைப் பூச்சிகள்.
வெறுத்துப் போனான் வேளாங்கன்னி பக்தன்.

கோவிலுக்குச் சென்று மாதாவிடம் கோபமாகக் கத்தினான்:
'மாதாவே…!
உன் திருத்தலத்திலுள்ள அத்தனை அறைகளிலும்
மூட்டைப் பூச்சிகள் நிறைந்திருக்கின்றனவே..!
கவனிக்கக் கூடாதா…?

மாதாவிடமிருந்து பதில் வந்தது:
'மகனே…
மூட்டைப் பூச்சிகள் என் திருத்தலத்தில் அல்ல.
உன் மூட்டைக்குள்.
முதலில் மூட்டையை தூக்கி எறி.'

**“உள்ளுக்குள் நாற்றத்தை முடிந்து கொண்டு ஊரெல்லாம் நாறுதெண்டானாம்…!”**

முனைவர் சேவியர் அந்தோனி சே.ச
தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதர்களின் பாதையில்....



## புனித மரியா கொரற்றி

தனது உடல் இறைவன் வாழும் ஆலயம் என்பதை நினைவில் கொண்டு அன்னை மரியாவின் அரவணைப்பில் வாழ்ந்து புனிதராக மாறியவர். இவர் 1890ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் இத்தாலி நாட்டில் ஏழ்மையான அன்பும் இறைபக்தியும் மிகுந்த குடும்பத்தில் பிறந்தார். மரியா கொரற்றி ஆரம்பகாலத்தில் கல்வி கற்கும் வசதி இல்லாத காரணத்தால் தாயின் வழிகாட்டுதலால் விவிலியம் வாசித்து இறைவார்த்தையை தியானித்து இறைஞானத்திலும் இறையன்பிலும் சிறந்து விளங்கினார். தனது 12ஆம் வயதில் புதுநன்மை பெற்றுக்கொண்டார். தனது இதயத்தில் இறைவனை முதன்முறையாக ஏற்றுக்கொண்ட நாள் முழுவதும் இயேசுவுடன் உறவாடி மகிழ்ந்தார். மரியா கொரற்றியின் தந்தை மாசெலெனி பிரபு வீடடில் தோட்டவேலை செய்து அங்கேயே தங்கினார். அதே வீட்டில் வேலைக்கு வந்த ஜியோவானி அவரது மகன் அலெக்ஸாண்டரும் மரியா கொரற்றியின் வீட்டில் தங்கவேண்டிய சூழல் ஏற்பட்டது. தூய்மையின் லில்லி மலராக வாழ்ந்த மரியா கொரற்றி 1905ஆம் ஆண்டு யூலை 5ஆம் நாள் வீட்டில் தனிமையாக இருந்தார். அலெக்ஸாண்டர் இந்த வாய்ப்பை தனக்கு சாதகமாக பயன்படுத்தி பாவம் செய்ய துணிந்தான். தனது ஆசைக்கு இணங்காத மரியா கொரற்றியின் மாசற்ற உடலை 14 முறை கத்தியால் குத்தி கிழித்தான். காயத்துடன் மருத்துவ மனையில் இருந்த கொரற்றி தன்னை கொலை செய்த அலெக்ஸாண்டரை மன்னித்து யூலை 6ஆம் நாள் இறந்தார்.

கொலை செய்ததற்காக அலெக்ஸாண்டருக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. பலகாலமாக மனந்திரும்ப மனமில்லாதிருந்த அலெக்ஸ்சாண்டருக்கு மரியா கொரற்றி விண்ணினின்று மலர்களை தன் கை நிறையக் கொடுத்ததாகக் கனவு கண்டதாகவும் அதனால் மனமாற்றம் அடைந்ததாகவும் அறிவித்தான். 27 அண்டுகளுக்குப் பின்னர் அவர் சிறையிலிருந்து விடுதலை பெற்றான். அப்போது மரியாவின் தாயிடம் சென்று மன்னிப்புக் கேட்டான் தம் இறுதி நாட்களில் கப்புச்சின் 3ஆம் சபைத் துறவியாக வாழ்ந்து கி.பி 1970ல் காலமானார். மரியா இறந்து 45 ஆண்டுகளுக்குள் மரியாவுக்கு திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ் புனிதர் பட்டம் அளித்தார். இந்த நிகழ்வுக்கு மரியாவின் தாயும், இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரரும் அலெக்ஸாண்டரும் வந்திருந்தனர். இவரது புனித பட்டமளிப்பு விழாவிற்கு உலகின் பல பகுதிகளிலிருந்தும் 250,000 மக்கள் உரோமைக்கு வருகை தந்தனர். இவர் 20 ஆம் நூற்றாண்டின் புனித ஆக்னஸ் என அழைக்கப்படுகிறார். இவரின் விழா யூலை 6ஆம் திகதியாகும்.

# மாணவர் தீபம்

மேகங்களுக்கிடையில் நட்சத்திரங்கள் தூங்கினாலும் இலைகளுக்கிடையில் காற்றுத் தூங்கினாலும் என் கண்கள் உனக்காக எவ்வேளையும் விழித்திருக்கும்.



மாணவச் செல்வங்களே வருங்கால சொத்துக்களே இவ்வளவு நாளும் உங்களை கவனிக்கவில்லையே என கவலைப்படுகிறாயா?

கவலையை விடு உன் சிந்தனையின் சக்தியை திருப்பு திருமலைத்தீபத்தில் உனக்காகவே ஏற்படுத்தப்பட்ட பகுதி தான் மாணவர் தீபம்.



இனி நீயும் எழுதலாம் கல்லூரியில் கற்கும் காலம் எழுதவும் கற்கலாம் அருமையான பருவத்தை முன்னேறப் பயன்படுத்து

என்ன எழுதுவது என்று தானே வினவுகின்றாய். சமய ஆசானையும் தமிழ்மொழி ஆசானையும் உன் பக்கம் வைத்துக் கொள்

பல்வேறு புத்தகங்கள் நீ படிக்க வேண்டும். உன் மனதில் தோன்றும் எண்ணங்களை வரிகளாக்கு. வந்து விடும் நல்ல கவிதை, கட்டுரை



சிறு சிறு விடயங்களையும் சேர்த்தும் அனுப்பலாம். எழுதிக் கொண்டே இரு – உன் பெயர் பத்திரிகையில் வரும் வரை.

இப்போது நீயொரு குட்டி எழுத்தாளர் தொடர்ந்து எழுதினால் நீயும் கண்ணதாசன் தான் செய்வாயா? என் மாணவ மணிகளே!



மாணவர் தீபம் தொடர்ந்து வரும் மாணவர்களே உங்கள் ஆக்கங்களை பங்குத்தந்தையின் ஒப்பத்துடன் அனுப்பவும்

**ஆசிரியர் – திருமலைத்தீபம்**

# இளைஞர் யுவதிகளுக்கான வலுவூட்டல் கருத்தமர்வு



யூலை மாதம் 8 ஆம திகதி ஸ்பெயின் நாட்டில் இருந்து வருகைதந்த அருட்பணி. யோசப் கீதபொன்கலன் அடிகளாரால் இளைஞர் யுவதிகளுக்கான ஒரு நாள் வலுவூட்டல் கருத்தமர்வானது நடைபெற்றது. இக்கருத்தமர்விற்கு எமது மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளில் இருந்தும் 126 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஆன்மீகம், சமூகம், கல்வி தொடர்பான விழுமியங்கள் இவ் இளைஞர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதற்கு அனுமதி தந்த எமது திருமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அடிகளாருக்கும், மறைமாவட்ட





இளைஞர் சம்மேளனத்தின் இயக்குனர் X.I. ரஜீவா அவர்களுக்கும், இக்கருத்தமர்வில் கலந்து கொண்ட அனைத்து குருக்களுக்கும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இரத்ததான முகாம்



திருகோணமலை மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் சம்மேளனத்தினால் 02.07.2023 அன்று இரத்ததான நிகழ்வு திருகோணமலை பாலையூற்று புனித லூர்து அன்னை திருத்தலத்தில் ஒழுங்கமைக்கப்பட்டது. இதில் அருட்தந்தையர்கள், கத்தோலிக்க இளைஞர் சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் பெரியவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிவிலியம் பற்றிய பொதுவான அறிமுகம்

திருமதி. ஜெயவதனி மரியதாஸ் (IAS)

- திருவிவிலியம்
  - திருவிவிலியம் ஒரு தனிநூல் என்று கூறுவதை விட நூலகம் / நூற்களஞ்சியம் என்று கூறுவதே மிகப் பொருந்தும்.
  - முதன் முதலில் அச்சேறிய நூல். "பைபிள்" என்ற ஆங்கிலப் பெயர். "பிபிளுஸ்" என்ற கிரேக்கப் பதத்திலிருந்து வந்தது. "பிபிளுஸ்" என்பது அக்காலத்தில் எழுதப்பயன்படுத்தப்பட்ட ஒரு வகைப் புல் தண்டின் பெயர்.
  - பைபிள் என்பதைத் தமிழில் "விவிலியம்" என்பர்
  - திருவிவிலியத்தைப் "புனித நூல்" எனப் புனித கிளமன்ட் கூறியுள்ளார்.
- திருவிவிலியத்தின் வேறு பெயர்கள்
  - பைபிள், வேதாகமம், மறை நூல், வேத நூல், புனித நூல்
- திருவிவிலியத்தின் இரு பெரும் பிரிவுகளும்

1. பழைய ஏற்பாடு

  - இதில் மீட்பின் வரலாறு விளக்கப்பட்டுள்ளது.
  - இஸ்ரயேல் மக்கள் வாழ்வில் இடம்பெற்ற அனுபவங்கள், நிகழ்வுகளை நம்பிக்கையுடன் எடுத்துரைத்துள்ளது. இதன் பிரதான நோக்கம் இறைநம்பிக்கையை வளர்ப்பதேயாகும்.
  - 46 நூல்களைக் கொண்ட பழைய ஏற்பாட்டை கத்தோலிக்கர்கள் பயன்படுத்துகின்றனர்.
  - இஸ்ரயேலரின் "விடுதலைப் பயணம்" பழைய ஏற்பாட்டின் மையமாகத் திகழ்கின்றது.

2. புதிய ஏற்பாடு

  - திருவிவிலியத்தின் இரண்டாம் பகுதியே புதிய ஏற்பாடு
  - இறைவன் முழு மனுக்குலத்தோடும் ஏற்படுத்திய உறவு / தொடர்பு பற்றி எடுத்துரைக்கின்றது.
  - 27 நூல்களைக் கொண்ட புதிய ஏற்பாட்டின் மையமாக "இயேசுவின் உயிர்ப்பு" அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

- திருவிவிலியம் பதிலளிக்கும் 03 பிரதான வினாக்கள்
  - நான் யார்?
  - நான் எதற்காக இவ்வுலகில் வாழ்கிறேன்
  - உலகில் எனக்குரிய இடம் என்ன?
- திருவிவிலியத்தில் இறைவனின் திட்டம் 03 முறைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
  - மனித நிகழ்வுகள் மூலம்
  - கவிதை, கதை, சங்கீதங்கள் வழியாக
  - அடையாளங்கள் மூலம்
- திருவிவிலியத்தின் நோக்கம்
  - திருவிவிலியத்தின் முக்கிய நோக்கம் "இறையாட்சி" இயேசு இறையாட்சியை மக்களுக்கு அறிவித்து, அதை நிறுவி மனுக்குலத்தோரை அனைத்து அடிமைத்தனத்திலிருந்தும் விடுவித்து, இறையாட்சியில் சேர்க்கவே இம்மண்ணகம் வந்தார்.
  - கடவுளின் அரசு, இறையரசு (மாற்கு, லூக்கா) விண்ணரசு (மத்தேயு) மோட்சம், விண்ணக வீடு என்றெல்லாம் "இறையாட்சி" அழைக்கப்படுகின்றது.
  - திருவிவிலியத்தின் முக்கிய தலைப்பு "இயேசு"
- திருவிவிலிய நூல்களின் வகைகள்

| | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு | மொத்த நூல்கள் |
|---|---|---|---|
| ○ எபிரேய விவிலியம் | 39 | - | 39 |
| ○ கிறிஸ்தவ விவிலியம் | 39 | 27 | 66 |
| ○ கத்தோலிக்க திருவிவிலியம் | 46 | 27 | 73 |

- எபிரேய விவிலியம்
  - யூதர்களும், கிறிஸ்தவர்களும் பழைய ஏற்பாட்டில் (39 நூல்கள்) பயன்படுத்துவது எபிரேய பிரதியாகும். இது "மசோரோடிக்" எனவும் அழைக்கப்படுகின்றது.
  - இந்த எபிரேய வேதாகமத்தை எபிரேய மொழி பேசுவோர், "தனக்" என்றழைத்தனர்.
  - யூதர்கள் பழைய ஏற்பாடு என்ற பெயரை விரும்பாமையால் "தனக்" என்றழைத்தனர்.
- செப்டுவாஜின்ற் – கிரேக்க மொழிபெயர்ப்பு
  - எபிரேய விவிலியம் (39 நூல்கள்) கிரேக்கரின் ஆட்சிக் காலத்தில் கிரேக்க மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டது.
  - கிரேக்கரின் ஆட்சிக் காலத்தில் வேறு சில நூல்களும் எழுதப்பட்டன. அவையாவன
    1. தோபித்து 2. யூதித்து 3. சாலமோனின் ஞானம்
    4. சீராக்கின் ஞானம் 5. பாரூக்கு 6. மக்கபேயர் - முதல் நூல்
    7. மக்கபேயர் - இரண்டாம் நூல்
  - இந்த 7 நூல்களையும் கிரேக்க மொழி பேசும் அலெக்சாந்திரிய யூதர்கள் கிரேக்க மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்ட 39 நூல்களுடன் சேர்த்துக் கொண்டனர்.
  - அந்த மொழிபெயர்ப்பை 70 பேர் செய்தபடியால் அது "செப்டுவாஜின்ற்" என்றழைக்கப்படுகின்றது.
  - யூதரின் கிரேக்க திருவிவிலியத்தில் 46 நூல்கள் உள்ளன.
  - இதையே கத்தோலிக்கர்களாகிய நாமும் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்துகின்றோம். இந்த 07 நூல்களையும் நாம் "இணைத்திருமுறை நூல்கள்" என்றழைக்கின்றோம்.
- வல்கேட் - இலத்தீன் மொழிபெயர்ப்பு
  - திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டின் 27 நூல்களும் கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டன.
  - கி.பி 400 ஆம் ஆண்டளவில் கிரேக்க பழைய (செப்டுவாஜின்ற்), புதிய ஏற்பாடும் இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டது.
  - இப்பணியை மேற்கொண்டவர் புனித ஜெரோம் ஆவார்.
  - இவ்வாறாக உருவாகிய திருவிவிலியத்தையே "வல்கேட்" என்கிறோம்.

## மாணவர் தேடல்...

01. மறைக்கல்வி என்றால் என்ன?
மறைக்கல்வி என்பது அனைத்து வாழ்வியல் அம்சங்களையும் உள்ளடக்கியதாகும். எடுத்துக்காட்டாக: ஆன்மீகம், உளவியல், சமுகவியல், இறையியல், மனித மைய இறையியல், நன்னெறி, ஊடகவியல், சூழலியல், இயற்கை ஆன்மீகம், பன்முகத் தன்மை, பண்பாட்டு நிலை, அரசியல், பொருளாதாரம், சமய நல்லிணக்கம் அனைத்தும் சேர்ந்த கலவைதான் மறைக்கல்வியாகும்.

02. மறைக்கல்விப் பாடத்திட்டம்.
  - சமூக மறைக்கல்வி
  - அனைவருக்குமான மறைக்கல்வி
  - நல்லாயன் மறைக்கல்வி
  - குடும்ப மறைக்கல்வி
  - திருவழிபாட்டு மறைக்கல்வி
  - மனித மைய மறைக்கல்வி
  - கிறிஸ்தவக் கோட்பாட்டு மறைக்கல்வி

03. மறைக்கல்வியின் நோக்கம்.
  - இயேசுவை அறிவது
  - இயேசுவை அனுபவிப்பது
  - இயேசுவை அறிக்கையிடுவது

04. மறைக்கல்வியின் இலக்கு மக்கள்.
  - ஆசிரியர்
  - பெற்றோர்
  - மாணவர்கள்

ஆசிரியர் - பெற்றோர்

சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்ற கூற்றிற்கிணங்க, மறைக்கல்வியைத் தெளிவாகக் கற்றுக்கொண்டு அதன்படி வாழும் ஆசிரியர்களும், பெற்றோர்களுமே அதனை மாணவர்களுக்குக் கற்பிக்கத் தகுதி படைத்தவர்கள்.

மறைக்கல்வி என்பது வாழ்க்கைக்கல்வி அனுபவம் வழியாக வாழ்க்கையை நெறிப்படுத்தும் அற்புதக் கல்வி. ஆகவே தான், கிறிஸ்தவ வாழ்க்கையைத் தரமாக வாழும் ஆசிரியர், பெற்றோர் உரமான மறைக்கல்வியைப் பெறுதல் அவசியம்.

05. மறைக்கல்வியின் மூன்று நிலைகள்.
  - இறைநம்பிக்கையைப் பற்றி கற்பிப்பது
  - இறைநம்பிக்கையிலிருந்து கற்பிப்பது
  - இறைநம்பிக்கையில் கற்பிப்பது

1. இறைநம்பிக்கையைப் பற்றி கற்பிப்பது.

இந்த முதல் நிலையைக் கற்றுக்கொடுக்கப் புத்தக் அறிவு கொண்ட ஆசிரியர்கள் இருந்தால் போதும்.

2. இறைநம்பிக்கையிலிருந்து கற்பிப்பது.

மறைக்கல்வி அறிவுக்கல்வியாய்ப் பார்க்காமல் அனுபவக் கல்வியாய் உணரும் மறைக்கல்வி ஆசிரியர்கள், மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் இறைநம்பிக்கையைத் தங்களின் இறைநம்பிக்கை அனுபவத்திலிருந்து பகிர்ந்துகொள்ளும் நிலையே இது.

3. இறைநம்பிக்கையில் கற்பிப்பது.

இறைநம்பிக்கையைக் கற்றுக்கொண்ட மாணவர்கள், அதை ஆசிரியர் அனுபவப் பகிர்வின் வழியாக உள்ளம் தொடப்பட்ட மாணவர், தான் பெற்ற அவ்இறைநம்பிக்கை அனுபவத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதே இந்நிலையின் நோக்கமாகும்.



அருட்பணி. சின்னப்பன் (தமிழ் நாடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித யோவான் நற்செய்தி
## 01 – 04 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 500/= 2ஆம் பரிசு 300/= 3ஆம் பரிசு 200/=

**கேள்வி பதில்**

1. கடவுளால் யோவான் அனுப்பப்பட்டதன் காரணம் என்ன?

விடை:.............................................................

2. திருச்சட்டம் யார் வழியாக கொடுக்கப்பட்டது?

விடை:.............................................................

3. யோவானை குறித்து எசாயா வெளிப்படுத்தி உரைத்தது யாது?

விடை:.............................................................

4. யோவானிடம் இயேசு திருமுழுக்குப் பெற வந்த வேளை யோவான் முதலில் கூறியது?

விடை:.............................................................

5. மெசியா என்பதன் பொருள் என்ன?

விடை:.............................................................

**சரி, பிழை எழுதுக.**

6. அருளும் உண்மையும் இயேசு வழியாக வெளிப்பட்டன. (   )

7. எருசலேம் ஆலயம் கட்டுவதற்கு ஏறத்தாள நாற்பத்தாறு மாதங்கள் ஆகின. (   )

8. இயேசு சமாரியப் பெண்ணிடம் குடிக்கத் தண்ணீர் கேட்டார். (   )

9. இயேசு மக்களுக்குத் திருமுழுக்கு வழங்கி வந்தார். (   )

10. கலிலேயா திருமணவீட்டில் இயேசுவின் தாய் மரியா திருமண வீட்டாருக்கு உதவிபுரிய விரும்பினார். (   )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. தொடக்கத்தில்__________ இருந்தது. அவ்வாக்கு __________ இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது.

12. மண்ணுலகிலிருந்து __________ மண்ணுலகைச் __________ மண்ணுலகு பற்றியே அவர் __________

13. நீ யோவானின் மகன் __________இனி __________எனப்படுவாய் என்றார்.

14. ஆண்டவருக்காக வழியைச் __________எனப் பாலைநிலத்தில் __________ஒன்று கேட்டது.

15. வானம் __________கடவுளின் தூதர்கள் __________மீது __________ இறங்குவதையும் காண்பீர்கள்.

பெயர் :.............................................................

முகவரி :.............................................................

பங்கு :.............................................................

முடிவுத்திகதி 30.09.2023

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி – 55
## எசாயா 01 – 04 அதிகாரங்கள்

1. யூதா நாட்டின் அரசர்கள்?

விடை:.............................................................

2. இவற்றின் இரத்தத்திலும் எனக்கு நாட்டம் இல்லை?

விடை:.............................................................

3. இவற்றை நான் சகிக்கமாட்டேன்?

விடை:.............................................................

4. தொடக்க காலத்தில் இருந்தது போலவே இவர்களை மீண்டும் தருவேன்?

விடை:.............................................................

5. சீயோனிலிருந்தே திருச்சட்டம் வெளிவரும் எருசலேமிலிருந்தே இது புறப்படும்?

விடை:.............................................................

6. மானிடர் தாழ்நிலையை அடைவர் மக்கள் இதை அடைவார்கள்?

விடை:.............................................................

7. அந்நாளில் மக்களினத்தார் தாம் வழிபடுவதற்கு உருவாக்கிய இவைகள் அகழ் எலிகளுக்கும் வௌவால்களுக்கும் எறிந்து விடுவர்?

விடை:.............................................................

8. இவர்கள் செருக்குக் கொண்டவர்கள் தங்களது கழுத்தை வளைக்காது நிமிர்ந்து நடக்கின்றார்கள்?

விடை:.............................................................

9. ஆடம்பர உடைகளுக்குப் பதிலாக அவர்கள் இதை உடுத்துவார்கள் அழகிய உடல் கொண்ட அவர்கள் இதை அடைவார்கள்?

விடை:.............................................................

10. எருசலேமில் தப்பி வாழ்வோரும் இவர்கள் எனப் பெயர் பெறுவர் உயிர் பிழைப்பதற்கென்று எருசலேமில் பெயர் எழுதப்பட்டோரும் இவர்கள் எனப்படுவர்.

விடை:.............................................................

11. இல்லத்தில் உடுத்துவதற்கு உடையோ, உண்பதற்கு உணவோ ஒன்றுமில்லை என்னை நீங்கள் ஏற்படுத்தவும் வேண்டாம்?

விடை:.............................................................

12. ஆண்டவரின் ஒளியில் நடக்க அழைக்கப்பட்ட குடும்பம் எது?

விடை:.............................................................

13. நிலையற்ற மனிதர் மேல் இதனை வைக்காதீர்?

விடை:.............................................................

14. நீங்கள் நாடி வழிபட்ட தேவதாரு மரங்களை முன்னிட்டு இதனை அடைவீர்கள்.

விடை:.............................................................

15. ஆண்டவருக்குரிய நாள் ஒன்று இருக்கிறது. அன்று இதுடைய அனைவரும் தாழ்வுறுவர்.

விடை:.............................................................

பெயர் :.............................................................

முகவரி :.............................................................

தரம் :.............................................................

பங்கு :.............................................................

முடிவுத்திகதி 30.09.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்



படம் – 01



படம் – 02

- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 இல் வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
- 1. 2. 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ஆம் பரிசு - 500/- 2ஆம் பரிசு - 300/- 3ஆம் பரிசு - 200/-

பெயர் :

முகவரி :

தரம் :

பங்கு :

முடிவுத்திகதி 30.09.2023

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவுகள் – 42
## நீதிமொழிகள் ( 4 – 6 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| செ | வி | சா | யு | ங் | க | ள் | | மெ | ள் |
| ல் | ழி | எ | ளி | ஓ | றை | க | வை | ய் | க |
| டி | ட் | தொ | த் | ர் | நீ | | து | யு | ர் |
| ன் | நெ | | ஞா | நா | னை | ல் | ந் | ண | தீ |
| ட | டு | யை | ன | ட் | த | யி | ரு | ர் | யா |
| து | ந் | ளை | மு | ட | போ | கை | யி | வு | ணி |
| த் | தொ | ட | ள் | ங் | ற் | ன் | பா | த | க |
| க | லை | ட் | ளோ | கொ | ந | ட | ப் | ழ | க் |
| வே | யி | க | ர் | ள் | | வே | ழி | ல் | ற |
| வி | ல் | ய் | டா | ட் | மா | ழ | வி | | பு |


1ஆம் பரிசு 500/= ரூபா
லீ. பியூரா
இக்பால் வீதி, மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம் மூதூர்

2ஆம் பரிசு 300/= ரூபா
வெ. வெனடிக்ஷன்
5ம் வட்டாரம், குப்பூறிட்டி
புனித சவேரியார் ஆலயம்

3ஆம் பரிசு 200/= ரூபா
S. வெலோ
வித்தியாலய வீதி, இலிங்கநகர்
யூதாததேயு ஆலயம்







## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்



1ஆம் பரிசு 500/= ரூபா
S. ஜவன்
இல. 64, மத்திய வீதி
உவர்மலை
குழந்தை இயேசு ஆலயம்.

2ஆம் பரிசு 300/= ரூபா
பா. டனிக்ஷா
1ம் வட்டாரம்
சல்லி சாம்பல்தீவு
இறை இரக்கத் திருத்தலம்

3ஆம் பரிசு 200/= ரூபா
மை. ஆரோன்
இல. 70/3, யாட் அடை வீதி
புனித மரியாள் பேராலயம்



## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி ~ 53
## நீதிமொழிகள் 16~31 அதிகாரங்கள்



1ஆம் பரிசு 500/= ரூபா
S. லறிஸ்
3ம் வட்டாரம், நிலாவெளி
புனித சூசையப்பர் ஆலயம்

2ஆம் பரிசு 300/= ரூபா
S. ஆரோன்
இல. 48/204, கண்டி வீதி
புனித குவாடலூப்பே அன்னை ஆலயம்

## புனித லூக்கா நற்செய்தி
## அதிகாரங்கள் 17 – 20

1ஆம் பரிசு 500/= ரூபா
R. டிலுக்ஸ்ராஜ்
இல. 48, நித்தியபுரி
புனித வனத்து அந்தோனியார் ஆலயம்

2ஆம் பரிசு 300/= ரூபா
ஜோ. அஸ்ஸ்ரி அமலராணி
இல. 101, அன்புவழிபுரம்
புனித சதாசகாய அன்னை ஆலயம்


3ஆம் பரிசு 200/= ரூபா
ச. தரோன்ஷ்வன்
இல. 89, அந்தோனியார் வீதி
புனித வனத்து அந்தோனியார் ஆலயம்



3ஆம் பரிசு 200/= ரூபா
ச. எஸ்ரெவிஸ்லாஸ்
இல. 70/36, யாட் அப்ரோச் வீதி
புனித மரியாள் பேராலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

ஞாயிறு மறைப்பாடசாலை மாணவர்களுக்கான திருவிவிலிய அறிவுப்போட்டி 01.07.2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்திலும், புனித மரியாள் பேராலயத்திலும், கட்டுரைப் போட்டியானது 03.07.2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்திலும் நடைபெற்றன.



**மறையாசிரியர்களுக்கான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி**

மறைமாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 50 இற்கும் மேற்பட்ட மறையாசிரியர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட மூன்று நாள் பயிற்சிக் கருத்தமர்வானது 09.06.2023 - 11.06.2023 வரை றாகம தேவத்தை தியான இல்லத்தில் தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு எமது மறைமாவட்டத்திலிருந்தும் 05 பேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



திருமலைத்தீபம் எழுத்தாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுடனான கலந்துரையாடலானது மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. றொஹான் பேணார்ட் அடிகளாரின் தலைமையில் 29.07.2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெற்றது.








ஞாயிறு மறைப்பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட உளவியல் கருத்தமர்வானது 03.06.2023 அன்று அருட்பணி. ஜிரோன் டிலிமா அடிகளாரால் மறைக்கல்வி நிலையத்தில் நடாத்தப்பட்டது.







கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் பாடசாலை விடுதி மாணவர்களுக்கான “சிறுவர் துஷ்பிரயோகம்” தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வானது திரு. A.R நிரோஷன் (LLB (Hons) Attorney at Law) அவர்களின் வழிகாட்டலில் 29.07.2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org